**செ. கு. எண்: 050** **நாள்: 01.06.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 1.6.2019</u>

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், கடப்பேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோதண்டம் என்பவரின் மகன் திரு. பிரகாஷ் என்பவர் அரசுப் பேருந்து மோதி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், கருவலூர் கோவில் திருவிழாவின் போது, ஏற்பட்ட விபத்தில் கோயம்புத்தூர் மாவட்டம், கெம்பட்டி காலனியைச் சேர்ந்த திரு. மீனாட்சிசுந்தரம் என்பவரின் மகன் திரு. வேணுகோபால் என்பவர் பலத்த காயமடைந்து, மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், பெரப்பஞ்சோலை கிராமத்தைச் சேர்ந்த திரு. லட்சுமணன் என்பவரின் மகன் திரு. சந்திரன் என்பவர் கிணறு தூர் வாரும் போது, மண் சரிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வாய்மேடு மேற்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பையன் என்பரின் மனைவி திருமதி காசியம்மாள் என்பவர் தனது வீட்டின் கூரை இடிந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அந்தநல்லூர் பகுதி மற்றும் கிராமம் முக்கொம்பு காவேரி ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாயனூர், ராம்ஜி நகரைச் சேர்ந்த திரு. ரெங்கசாமி என்பவரின் மகள் செல்வி கீர்த்திகா மற்றும் திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறையைச் சேர்ந்த திரு. கோபிநாதன் என்பவரின் மகன் செல்வன் ஹரிஹரதீபக் ஆகிய இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

துறையூர் வட்டம், தென்புறநாடு மஜரா புத்தூர், அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளியில் 7-ம் வகுப்பு படித்து வந்த திரு. தங்கராசு என்பவரின் மகள் செல்வி பிரியதர்ஷினி மற்றும் திரு. மாணிக்கம் என்பவரின் மகள் செல்வி சிந்துஜா ஆகிய இருவரும் உணவு இடைவேளையின் போது, அருகில் உள்ள குட்டையில் கை கழுவச் சென்ற போது, எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், புன்னகாயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. அடைக்கலம் என்பவரின் மகன் திரு. சேசுராஜ் என்பவர் கோவில் திருவிழாவிற்கு சென்ற இடத்தில், எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

சாலை விபத்து மற்றும் எதிர்பாராத விதமாக நடந்த பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த மேற்கண்ட9 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட துயரச் சம்பவங்களில் **உயிரிழந்த 9 நபர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**